## சுருக்கம்

பள்ளிக் கல்வி – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது அறிவிப்பு - திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலியில் வ.உ.சிதம்பரனார் மற்றும் மகாகவி பாரதியார் படித்த பள்ளிக்குத் தேவையான கூடுதல் வகுப்பறைகள், கலையரங்கம் மற்றும் நுழைவு வாயில் ஏற்படுத்துதல் – நிர்வாக அனுமதி வழங்கியது - நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வித் (பொது1(1) துறை**

அரசாணை (நிலை) எண்:87

நாள். 12.05.2022.
திருவள்ளுவர் ஆண்டு 2053
சுபகிருது வருடம் சித்திரை-29

படிக்கப்பட்டது:-

1. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது அறிவிப்பு நாள் 03.09.2021
2. அரசாணை (நிலை) எண். 06, பள்ளிக் கல்வி (பொது1(1))த்துறை நாள் 27.01.2022.
3. பள்ளிக் கல்வி ஆணையரின் கடித ந.க. எண். 55104/என்2/ இ2/ 2021 நாள் 24.03.2022.

**ஆணை:-**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கடந்த சட்டமன்ற கூட்டத்தொடரில் 03.09.2021 அன்று திரு. வ.உ.சிதம்பரனாரின் 150-வது பிறந்த தினத்தை முன்னிட்டு கீழ்க்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது:-

"திருநெல்வேலியில் வ.உ.சிதம்பரனார் மற்றும் மகாகவி பாரதியார் படித்த பள்ளிக்குத் தேவையான கூடுதல் வகுப்பறைகள், கலையரங்கம் மற்றும் நினைவு நுழைவு வாயில் 1.05 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்"

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட, அரசாணையில், மேற்காண் அறிவிப்பிணை செயல்படுத்தும் பொருட்டு 2021-2022-ம் ஆண்டில் ரூ.105.00 இலட்சம் அனுமதித்து நிர்வாக ஒப்புதல் அளித்து ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட, கடிதத்தில் பள்ளிக் கல்வி ஆணையர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவிப்பில் திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலியில் வ.உ.சிதம்பரனார் மற்றும் மகாகவி பாரதியார் படித்த பள்ளிக்குத் தேவையான கலையரங்கம், கூடுதல் வகுப்பறைகள் மற்றும் நுழைவு வாயில் 1.05 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டதனைத் தொடர்ந்து 2021-2022-ஆம் ஆண்டில் ரூ.105.00 இலட்சங்கள் அனுமதித்து நிர்வாக ஒப்புதல் மற்றும் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது என்றும், தற்போது முதன்மைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்கள் திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலியில் வ.உ.சிதம்பரனார் மற்றும் மகாகவி பாரதியார் படித்த பள்ளிக்குத் தேவையான கலையரங்கம், கூடுதல் வகுப்பறைகள் மற்றும் நுழைவு வாயில் அமைத்தல் பணிகள் மேற்கொள்ள நிதிஒதுக்கீடு பெற்றுத் தருமாறு

(த.பி.பா)

கோரியுள்ளதாக தெரிவித்து மேற்காண் பணிகளை மேற்கொள்ள வரும் 2022-2023-ஆம் நிதியாண்டில் ரூ.105.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

4. மேலே பத்தி-3-ல் உள்ள பள்ளி கல்வி ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலியில் வ.உ.சிதம்பரனார் மற்றும் மகாகவி பாரதியார் படித்த பள்ளிக்குத் தேவையான கலையரங்கம், கூடுதல் வகுப்பறைகள் மற்றும் நுழைவு வாயில் ஏற்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ள ரூ.1,05,00,000/க்கு(ரூபாய் ஒரு கோடியே ஐந்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி-4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

4202- கல்வி, போட்டி விளையாட்டு, கலை, பண்பாடு குறித்த மூலதனச் செலவு- 01 பொதுக் கல்வி – 202 இடைநிலைக் கல்வி- மாநிலச் செலவினங்கள்- AC பாரம்பரிய பள்ளிக் கட்டடங்கள் புதுப்பித்தல் – 416-பெரும்பணிகள்-01 பெரும்பணிகள்.

IFHRMS: த.தொ.கு.4202 01 202 AC 416 01

6. மேற்கண்ட புதிய கணக்குத் தலைப்பிற்கு பள்ளிக் கல்வி ஆணையர் அவர்கள் மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார்.

7. மேற்படி துவக்கப்பட்டுள்ள புதிய கணக்குத் தலைப்பை தங்களது பதிவேடுகளில் துவக்கிக் கொள்ளுமாறு சம்மந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்/ கருவூல அலுவலர்களை கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. மேலே பத்தி-4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புதுப்பணியாகும்". இதற்கான சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ-1) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். அடுத்த துணை மானியக் கோரிக்கை வரை தேவைப்படும் சரியான தொகையினைக் கணக்கிட்டு எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்புதல் செய்ய தமிழ்நாடு எதிர்பாராச் செலவு விதிகள், 1963-இணைப்பில் உள்ள படிவம் அ-ன்படி இவ்வரசாணையுடன் நிதி (வ.செ-1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு பள்ளிக் கல்வி ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை 2022-23-ம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கும் பொருட்டு, உரிய செயற்குறிப்பினை உரிய நேரத்தில் இதற்கான குறிப்புடன் நிதி (வ.செ/பொ-1/கல்வி-II) துறைக்கு அனுப்புமாறு பள்ளிக் கல்வி ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(த.பி.பா)

9. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதல் பெற்ற அ.சா.கு.எண். 21757/ நிதி(கல்விII)த்துறை /2022 , நாள் 09 .05.2022-ன்படி வெளியிடப்படுகிறது.இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.0137 (நூற்று முப்பத்து ஏழு)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**காகர்லா உஷா**
**அரசு முதன்மைச் செயலாளர்**

**பெறுநர்:**
பள்ளி கல்வி ஆணையர் சென்னை-6.
முதன்மை பொறியாளர் (ம)தலைமைப் பொறியியளர்(பொது)
சென்னை மண்டலம், பொதுப்பணித்துறை,
சேப்பாக்கம், சென்னை-5
மாநில கணக்காயர், சென்னை 18/35.
**நகல்;**
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்
அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு நிதி (ம) மனித வள மேலாண்மைத்துறை
அமைச்சர் அவர்களின் அலுவலகம் சென்னை-9.
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்
அவர்களின் அலுவலகம் சென்னை-9.
முதன்மைச் செயலாளர் அவர்களின் முதுநிலை
தனிச்செயலாளர்,பள்ளிக் கல்வித் துறை,
சென்னை-9.
நிதி(கல்விII)/வரவு செலவு/பொது-1/11/வ.வ-1)த்துறை,
சென்னை-9.
பொதுப் பணித் துறை, சென்னை-9.
பள்ளிக் கல்வித் துறை(பட்ஜெட்)துறை,
சென்னை-9
உதிரி /இருப்பு கோப்பு.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

12.5.2022

**பிரிவு அலுவலர்.**